பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் வாலி

உலகம் எனக்காக ஓடும் நதிகளும் எனக்காக
மலர்கள் மலர்வது எனக்காக அன்னை மடியை விரித்தாள் எனக்காக
உலகம் பிறந்தது எனக்காக ஓடும் நதிகளும் எனக்காக
மலர்வது எனக்காக அன்னை மடியை விரித்தாள் எனக்காக
(உலகம் பிறந்தது)

காற்றில் மிதக்கும் ஒலிகளிலே கடலில் தவழும்
இறைவன் இருப்பதை நானறிவேன் என்னை அவனே தானறிவான்
இறைவன் இருப்பதை நானறிவேன் என்னை அவனே தானறிவான்.
(உலகம் பிறந்தது)

தவழும் நிலவாம் தாரகை பதித்த மணி மகுடம்
குயில்கள் பாடும் கலைக்கூடம் கொண்டது எனது அரசாங்கம்
குயில்கள் பாடும் கொண்டது எனது அரசாங்கம்
(உலகம் பிறந்தது)

எல்லாம் எனக்குள் இருந்தாலும் என்னைத் தனக்குள் வைத்திருக்கும்
அன்னை மனமே என் கோயில் அவளே என்றும் என் தெய்வம்
அன்னை மனமே என் கோயில் அவளே என்றும் என். தெய்வம்
(உலகம் பிறந்தது)

*பாடல் வரியில் விடுப்பட்ட இடத்தில் கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு நிறைவுச் செய்க.*

பிறந்தது மலர்கள் அலைகளிலே

தங்கரதம் கலைக்கூடம்

LIVEWORKSHEETS